**தலைப்பு 219 – விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும். இலங்கை சனநாயக சோலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின்கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும், அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 மே 31 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூன் 30 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும், நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும், பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் , மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19ம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள் , செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக்கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச்செல்வதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு, அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ, கூட்டாகவோ தாக்கமளிப்பதால், பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு, பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும்போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தை இனங்காணும் போதும், மதிப்பீட்டின்போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச்செய்தல், மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும்போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் , சம்பவங்கள் பொருத்தமாகவும், நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் சென்ற ஆண்டுடன் இணங்குவதாகவும்,

(ஆ) கடந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக என்னால் செய்யப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரச கணக்குகள் திணைக்களத்தின் 2021 நவம்பர் 26 அந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 2021/03 இன் 3.2 ஆம் பந்தியின் பிரகாரம் அறிக்கையிடும் நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள எண்ணிக்கை இறுதி திறைசேரிக் கணக்குக் கூற்றில் காட்டப்பட்டுள்ள வருமானம் செலவுகள் மற்றும் பிரதான பேரேட்டு மீதியுடன் இணங்கின்றதாக சான்றுபடுத்த வேண்டியமை குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களில் ACA2, ACA2(i), ACA2(iii), ACA2(iv) ACA2(v) மற்றும் நிதிச் செயலாறற்ல் கூற்றில் குறிப்புக்கள் 05,06,07,10,11,14,15 இல் காட்டப்பட்டிருந்த வருடாந்த வரவு செலவுத்திட்ட ஒதுக்கீட்டுப் பெறுமதி ரூபா 547,871,000 ஆல் திறைசேரி அறிக்கையின் பிரகாரம் இணங்கியிருக்கவில்லை. 2021 ஆகஸ்ட் 30 ஆந் திகதிய அமைச்சரவை கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட முடிவொன்றின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வரவு செலவுத்திட்ட திணைக்களத்திற்கு ஒதுக்கங்கள் மீண்டும் திருப்பி அனுப்பட்டமையால் இந்த முரண் ஏற்பட்டிருந்ததாக இந்த இணக்கமின்மைக்கு காரணமாக ACA2(iii) படிவத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த அமைச்சரவை முடிவின் பிரகாரம் அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள திணைக்களம் மற்றும் ஏனைய | 2021.08.30 ஆந் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம் அனைத்து அமைச்சுக்கள் மற்றும் அதன் கீழ் உள்ள திணைக்களம் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்காக ஒதுக்கபபட்டுள்ள வரவு செலவுத் திட்ட ஒதுக்கங்களில் சேமிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட ஒதுக்கங்கள் தொடர்பாக அறிக்கையொன்று 2021.09.15 அல்லது அத் திகதிக்கு முன்னர் தேசிய வரவு செலவுத் திட்டப் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்குமாறு குறிப்பிடப்பட்டிருந்தது.<br><br>ஆனால் மேற்படி விஞ்ஞாபனத்தின் பிரகாரம் குறிப்பிட்டு அனுப்பபட்ட ஒதுக்கங்களின் சேமிப்பு கணக்கில் எடுக்கப்பட வேண்டிய முறை தொடர்பாக தெளிவான அறிவுறுத்தல் 2021 திசெம்பர் 31 வரையில் அரச கணக்குகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்டிருக்க வில்லை. அதன் பிரகாரம் ஒதுக்கங்களின் சேமிப்பு தொடர்பாக சரியாக | அரச கணக்குகள் வழிகாட்டி பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| நிறுவனங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த வரவு செலவுத் திட்ட ஒதுக்கங்களில் சேமிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட ஒதுக்கங்கள் தொடர்பாக விரிவான அறிக்கையொன்று 2021 செப்தெம்பர் 15 அல்லது அத் திகதிக்கு முன்னர் தேசிய வரவு செலவுத் திட்டப் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்பபிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சின் செயலாளருக்கு மற்றும் இராஜாங்க அமைச்சின் செயலாளருக்கு உத்தரவிடப்பட்டிருந்தது. ஆனால் விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தினால் இந்த அமைச்சரவை தீர்மானத்தின் அடிப்படையில் வருடாந்தம் வரவு செலவுத் திட்ட ஒதுக்கங்கள் மாற்றப்பட்டுக் காட்டப்பட்டிருந்தன. | குறிப்பிடப்பட வேண்டுமென்பதால் தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்திற்கு குறிப்பிடப்பட்டு அனுப்பட்டிருந்த ஒவ்வொரு செலவுக் கணக்குகளின் ஒதுக்கீட்டு சேமிப்புக்கள் CIGAS முறைமையில் SAVINg ஆக குறைக்கப்பட்டு காட்டப்பட்டிருந்தது. அத்துடன் இந்த அறவீடுகள் தொடர்பாக தெளிவாக குறிப்பிடப்பட்டு 2021 ஆம் வருடத்தின் 02 மாதாந்தக் கணக்குப் பொழிப்புக்கள் சமர்ப்பிக்கபட்டிருந்ததுடன் 2022 சனவரி மாதத்திலும் திருத்திய கணக்குப் பொழிப்பொன்றும் இச் சேமிப்புக்கள் குறிப்பிடப்பட்டு திணைக்களத்திற்கு இறுதிக் கணக்குகள் பொழிப்பு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மையைத் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | |

### 1.6.2 கட்டு நிதி இணைக்கக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 26 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இல 2021/03 சுற்றறிக்கையின் 7.2 ஆம் பந்தியில் அறிக்கையிடும் நிறுவனத்தினால் வேறு வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தருக்காக சேகரிக்கப்படுகின்ற வருமானம் நிதிச்செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப்படக் கூடாததுடன் , அவ்வருமானம் கட்டு நிதி இணைக்கக் கூற்றில் சீராக்கப்பட வேண்டுமென்பதும் கடந்த வருட ஒப்பீட்டுப் புள்ளி விபரங்களும் அதன் பிரகாரம் காட்டப்பட வேண்டுமென்பதும் குறிப்பிட்டுள்ளது. ஆனால் விளையாட்டு அபிவிருத்தி | வழிகாட்டி 7.2 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிச் செயலாற்றல் கூற்றில் (ACA-F) ஒப்பீட்டுத் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ACA-7 மாதிரிப்படிவத்தின் மூலம் 2020 ஒப்பீட்டுத் தகவல்கள் சமர்ப்பிக்கப்படுவதற்கு மாதிரிப்படிவத்தில் குறிப்பிடப்பட்டிருக்காமையால் சமர்ப்பிக்கப்படவில்லை. | அரச கணக்குகள் வழிகாட்டியின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |

திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கட்டு நிதி இணக்கக் கூற்றில் ஏனைய வருமானத் தலைப்பிற்காக விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தினால் சேகரிக்கப்பட்ட வருமானமாக ரூபா 30,567,623 கட்டு நிதி இணக்கக் கூற்றில் காட்டப்பட்டிருந்த போதிலும் கடந்த வருட ஒப்பீட்டுப் புள்ளி விபரத் தரவுகள் காட்டப்பட்டிருக்கவில்லை.

### 1.6.3 நிதி நிலைமைக் கூற்று

#### 1.6.3.1 நிதியல்லாச் சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் நிதியல்லாச் சொத்துக்கள் தொடர்பான கூற்றின் ஆரம்ப மீதி மற்றும் கடந்த வருடத்தின் இறுதி மீதிகளுக்கிடையில் Other Structure இன் கீழ் Outdoor sports & recreation facilities ரூபா 71,503,757 ஆன வேறுபாடொன்று காணப்பட்டதுடன் அது தொடர்பாக நிதிக் கூற்றக்களில் குறிப்பு மூலம் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை. | நிதியல்லாச் சொத்துக்கள் தொடர்பாக திறைசேரி அச்சீட்டுக் குறிப்புக்களில் 2020.12.31 இல் மீதிகள் திணைக்கள பேரேட்டு மீதிகள் மற்றும் web Interface இல் தனிப்பட்ட மீதிகள் பரீட்சிக்கப்பட்ட போது திறைசேரி அச்சீட்டுக் குறிப்புக்களில் ஆரம்ப மீதி சரியானதல்ல. திணைக்கள பேரேட்டின் பிரகாரம் 2020.12.31 இல் தயாரிக்கப்பட்ட ACA-6 மாதிரியில் (9151-1-3) Other Structure (61113) இல் சரியான மீதியின் அப் பெறுமதியுடன் Cumulative Non-Financial Asset Account Report- 2020 Final இன் மீதிகளுக்கிடையே காணப்பட்ட ரூபா 71,503,757 ஆன வேறுபாடு அரச கணக்குகள் குழுக் கூட்டத்திற்கு காலத்திற்கு காலம் அனுப்பட்ட கடிதங்கள் மூலம் சரி செய்யப்பட்டிருந்தது. இவ்வாறான தகவல்களை குறிப்பிடுவதற்காக நிதிக் | அரச கணக்குகள் வழிகாட்டி பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | கூற்றுக்களில் வேறு மாதிரியொன்று அறிமுகப்படுத்தப் பட்டிராததுடன் எதிர்காலத்தில் இவ்வாறான வேறுபாடொன்று காட்டப்பட்டால் இறுதி நிதிக் கூற்றுக்களில் குறிப்பு மூலம் சீராக்கம் தொடர்பான விபரங்கள் சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) 2020 செப்டெம்பர் மாதம் திணைக்களத்தினால் அகற்றப்பட்ட 04 வாகனங்களில் ஒரு அகற்றப்பட்ட வாகனத்திற்கான ரூபா 1,517,900 ஆன தொகை 2020 செப்டெம்பர் 07 இல் திணைக்களத்திற்கு கொடுக்கப்பட்ட போதிலும் திணைக்களத்தின் தினசரி கொடுப்பனவுகளுக்காக இத் தொகை பயன்படுத்தப்பட்டமையால் ரூபா 1,291,000 மட்டுமே 2020 செப்டெம்பர் 09 ஆந் திகதி வங்கியில் வைப்பிட்டதுடன் மிகுதித் தொகை 2020 செப்டெம்பர் 09 ஆந் திகதி வங்கியில் வைப்புச் செய்யப்பட்டது. நிதிப்பிரமாணம் 177(1) இன் பிரகாரம் சேகரிக்கப்படுகின்ற அரச பணம் தினசரி அனுப்பப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | 2020 செப்டெம்பர் 08 ஆந் திகதி தினசரி கொடுப்பனவுகளுக்காக பெறப்பட்ட ரூபா 347,310 ஆன காசோலையைப் பணமாக்க முடியாமையால் அன்றைய தினம் கையிலிருந்த பணத்திலிருந்து உரிய பணம் செலுத்தப்பட்டு நாள் இறுதியில் மேற்படி காசோலை மற்றும் மிகுதியாக காணப்பட்ட தொகை வங்கியிலிடப்பட்டது. (வங்கிக் கூற்றின் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்டது) | சேகரிக்கப்படுகின்ற அரச பணம் நிதிப் பிரமாணம் 177(1) இன் பிரகாரம் தினசரி அனுப்படல் வேண்டும். |

## 1.6.4 வாடகை மற்றும் வேலை முற்பணக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| (அ) நிதிக்கூற்றுக்களின் பிரகாம் 2021 சனவரி 01 இல் அறவிடப்பட வேண்டிய வாடகை மற்றும் வேலை முற்பணக் கணக்கின் ரூபா 214,180,450 ஆன மீதியில் 32,791,686 ஆன பெறுமதி சேர் | 2021 சனவரி 01 இன் மீதியில் முழுமையான முற்பணத் தொகைக்கான VAT வரித் தொகை உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் 2021 ஆம் வருடத்தில் முன்னைய வருடங்களின் | சரியாக நிதிக் கூற்றுகள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வரித் தொகை உள்ளடக்கப்பட்டிருந்தது. | மற்றும் நடப்பாண்டிற்குள் அறவிடப்படடிருந்த வாடகை வேலை முற்பணப் பெறுமதிக்கான வட் தொகை அறவிடப்பட்டுள்ளது. அதன் பிரகாம் 2021 திசெம்பர் 31 இல் நிலுவை மீதியில் அறவிடப்பட வேண்டியுள்ள முற்பணத் தொகை மற்றும் அத் தொகைக்கான வட் என்பன உள்ளடங்கும். | |
| (ஆ) | நிதிக்கூற்றுக்களில் வாடகை மற்றும் வேலை முற்பணக் கணக்கின் 2021 திசெம்பர் 31 இல் காட்டப்பட்டுள்ள ரூபா 69,349,972 ஆன மீதியில் அறவிடப்பட வேண்டியுள்ள முற்பணத் தொகை மற்றும் அத்தொகைக்கு உரிய பெறுமதி சேர் வரித் தொகை உள்ளடக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் வருடத்தில் கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டதன் பிரகாரம் வாடகை வேலை முற்பணங்களில் காணப்பட்ட மீதியில் அறவிடப்பட வேண்டியிருந்த முற்பண பெறுமதிகளுக்கான VAT தொகை 2021 ஆம் வருடத்தில் அறவிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2020 வருடம் வரை அறவிடப்பட வேண்டியிருந்த முற்பணங்களுக்கான ரூபா 12,782,874.84 தொகையொன்று VAT திரண்ட கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது. 2021 ஆம் வருடத்திற்கான அறவிடப்பட்ட முற்பண பெறுமதி (without VAT) ரூபா 119,291,837.63 ஆகும். 2021 ஆம் வருடத்திற்கான அறவிடப்பட்ட முற்பணப் பெறுமதிகளுக்கான VAT பெறுமதி ரூபா 12,755,764.83 ஆகும். | சரியாக நிதிக் கூற்றுகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | மன்னார் விளையாட்டுத் தொகுதி நிர்மாணத்திற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 40,962,026 ஆன (வரியுடன் கூடிய) வேலை தொடங்குவதற்கான முற்பணத் தொகை தொடர்பாக மற்றும் 2021 திசெம்பர் 31 இல் அப்பெறுமதியில் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 14,277,972 ஆன (வரி அற்ற) வாடகை வேலைகள் முற்பண மீதி நிதிக்கூற்றுக்களில் கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | 2015 ஆம் வருடத்தில் மன்னார் மாவட்ட விளையாட்டுத் தொகுதி நிர்மாணித்தல் செயற்திட்டம் வழங்கப்பட்டிருந்ததுடன் தொல்பொருள் பெறுமதியுடன் கூடிய காணியொன்று என்பதால் தொல்பொருள் திணைக்களத்தினால் 2018.01.24 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் நிர்மாண நடவடிக்கைகள் கைவிடப்படுவதற்கான அறிவுறுத்தல் | வாடகை வேலை முற்பணப் பெறுமதிகள் நிதிக் கூற்றுக்களில் சரியாக கணக்கிடப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | வழங்கப்பட்டிருந்ததுடன் மீண்டும் வேலை தொடங்குவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தமை 2019.02.07 ஆம் திகதியாகும். அதுவரை விலைகள் மாற்றமடைந்தமையால் விலை முரண ஒன்று அங்கீகரிக்கப்பட்டு மீண்டும் பணிகள் தொடங்கப்பட்டிருந்ததுடன் அக்காரணத்தினால் நிர்மாணம் தாமதமாகியது.<br><br>2015 ஆம் கருடத்தில் இதன் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தும் அக்காலத்தில் CIGAS நிகழ்ச்சித் திட்டம் இல்லாமையால் அது கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>இதன் திருத்திய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மீண்டும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் 2021 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட பற்றுச்சீட்டுக்கள் மூலம் வெளிக்காட்டப்பட்டுள்ளது. இது தொடர்பாக எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வரவு செலவுத் திட்ட ஒதுக்கங்கள் பயன்படுத்தப்பட்டு கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களுக்கு உடன்படல்.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தின் அபிவிருத்திப் பிரிவிற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 996,659 பெறுமதியான 03 பற்றுச்சீட்டுக்கள் நிதிக்கூற்று அறிக்கையில் மற்றும் திறைசேரி SA-92 அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்தப் பிரகாரம் கடப்பாடுகள் கணக்கிடப்பட்ட போது தவறுகள் இருந்தமையால் தவறுகளைத் திருத்தி அனுப்புவதற்காக மதியுரை நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டன. பொறுப்புக்கள் பதிவேடு தயாரிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் அப் பற்றுச்சீட்டுக்கள் கொடுப்பனவு செய்யப்பட்டிருக்காமையால் பொறுப்புக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கைப் ஏற்பாடுகளுக்கு இணங்க கடப்பாடுகளுக்கு உடன்படல் வேண்டும். |

**2.2 வைப்புக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பாக வருட இறுதியில் பட்டியல் தயாரிக்கப்பட்டு பொருத்தமான வகையில் குறிப்பிட்ட கணக்கிற்கு அல்லது அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், வைப்புக் கணக்கின் 2021 திசெம்பர் 31 இல் காணப்பட்ட 02 வருடங்கள் தொடக்கம் 05 வரையான ரூபா 6,647,740 ஆன 18 நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வைப்புக்கள் தொடர்பாக 2022 மே 25 வரையில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது. | வைப்புக் கணக்கில் 2021 திசெம்பர் 31 இல் காணப்பட்ட 02 வருடங்கள் தொடக்கம் 05 வரையான மற்றும் 05 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய வைப்புக்களில் இது வரையில் செய்யப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் கொடுப்பனவிற்காக கட்டுநிதி பிரிவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த வைப்புக்கள் குறைக்கப்பட்டு கொடுப்பனவிற்கான மிகுதி வைப்புக்கள் காட்டப்பட்டுள்ளன.<br><br>2020 ஆம் வருடத்தில் மற்றும் 2021 ஆம் வருடத்தில் இது வரையில் முடிவடையாத செயற்திட்டங்களின் பிடிகாசு வேலைகள் முடிக்கப்பட்டு இறுதி பற்றுச்சீட்டக்கள் சமர்ப்பிக்கப்பட்டு கையளிக்கப்படும் வரையில் விடுவிக்கப்படமாட்டாது. | நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் காலங் கடந்த வைப்புக்கள் தொடர்பாக வருட இறுதியில் பட்டியல் தயாரிக்கப்பட்டு பொருத்தமான வகையில் குறிப்பிட்ட கணக்கிற்கு அல்லது அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ரூபா 1,277,020 பெறுமதியான 05 ஒப்பந்தங்களுக்கான பராமரிப்புக் கால எல்லை கடந்திருந்த போதிலும் இறுதியில் பற்றுச் சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்படும் வரை அவற்றின் பிடிகாசு விடுவிக்கப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது. | பராமரிப்புக்காலம் கடந்திருந்த 5 செயற்திட்டங்கள் தொடர்பாக கீழ் வரும் விடயங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.<br><br>❖ ஹொக்கி விளையாட்டு மைதானத்தில் மின் விளக்குப் பொருத்தும் செயற்திட்டத்திற்கான கொடுப்பனவு நடவடிக்கைகளுக்காக நிதிப்பிரிவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br>❖ மாத்தறை மாவட்ட விளையாட்டுத் தொகுதியின் பராமரிப்பு | நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் காலங் கடந்த வைப்புக்கள் தொடர்பாக வருட இறுதியில் பட்டியல் தயாரிக்கப்பட்டு பொருத்தமான வகையில் குறிப்பிட்ட கணக்கிற்கு அல்லது அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். |

நடவடிக்கைகளுக்காக நிதிப்பிரிவிற்கு சமர்ப்பிக் கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

- ❖ கொட்டஹேன விளையாட்டுத் தொகுதி நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக மாநகர சபையின் பரிந்துரை கோரப்பட்டு கடிதம் அனுப்பட்டுள்ளது.
- ❖ பயாகல ராஜித சேனரத்ன மைதானத்திற்காக CECB நிறுவகத்தின் பரிந்துரை கோரப்பட்டு கடிதம் அனுப்பட்டுள்ளது.
- ❖ அளவ்வ கேட்போர் கூடம் நிர்மாணத்திற்கான கொடுப்பனவு நடவடிக்கைகளுக்காக நிதிப்பிரிவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை.

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. சட்ட ஏற்பாடுகளக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை. | கணக்காய்வு அவதானிப்புக்கள் இணங்காமை. | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) நிதிப்பிரமாணம் 139 | உறுதிச்சீட்டுக்களுக்கு கொடுப்பனவு செய்யப்படும் போது கணக்கீட்டு உத்தியோகத்தரினால் செய்யப்பட வேண்டிய முறை மற்றும் உறுதிச்சீட்டுக்களுக்கு கொடுப்பனவு செய்யும் அதிகாரியின் பொறுப்பின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாது திணைக்களத்தினால் 2021 டோக்கியோ ஒலிம்பிக் விளையாட்டு உற்சவத்திற்காக | கருத்துரை வழங்கப்படவில்லை. | உறுதிச்சீட்டுக்களுக்கு கொடுப்பனவு செய்யப்படும் போது நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் மற்றும் விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு நிதியத்திலிருந்து செய்யப்பட வேண்டிய கொடுப்பனவுகள் திணைக்களச் செலவு விடயத்தின் மூலம் செய்யப்படாது இருத்தல். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இலங்கையை பிரதிநித்தித்துவப்படுத்தும் விளையாட்டு வீரர்கள் மற்றும் பயிற்றுவிப்பாளர்களுக்கான படிகளாக ரூபா 26,328,910 ஆன கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தன. | | |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 260 | உறுதிச்சீட்டுக்களில் பெயர் குறிப்பிடப்பட்ட நபருக்கு அல்லது அவர்களது சட்டரீதியான முகவர்களுக்கு மட்டும் கொடுப்பனவு செய்யப்பட வேண்டியுள்ளது என்பதுடன், பிழையான பெயர் குறிப்பிடப்பட்ட நபருக்கு பணக் கொடுப்பனவின்றி செய்யப்படாதிருப்பதற்கு அனைத்து பாதுகாப்பு ஏற்பாடுகளும் பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும், ஒலிம்பிக் உற்சவத்திற்கு இலங்கையைப் பிரதிநித்தித்துவப்படுத்தும் சுவீடனிலிருந்து பங்கு பற்றிய விளையாட்டு வீரர்களுக்கு கொடுப்பனவு செய்வதற்கு முடிவெடுக்கப்பட்டு 1500 அமெரிக்க டொலருக்கான ரூபா 3,043,350 காசோலையில் நிறுவனத்தின் பெயராக விளையாட்டு வீரர்களின் பெயர் எழுதப்பட்டிருந்தும் பின்னர் அது மாற்றப்பட்டு அந்த விளையாட்டு வீரர்களின் இணக்கம் பெறப்படாது அப்பணம் மற்றும் அந்த விளையாட்டிற்கு வழங்குவதற்கு முடிவெடுக்கப்பட்டிருந்த 40 அமெரிக்க டொலர் அமையப் படிகளான ரூபா 81,156 உடன் இலங்கை குதிரையோட்டுநர் சங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அத்தொகை விளையாட்டு | கருத்துரை வழங்கப்படவில்லை. | உறுதிச்சீட்டுக்களில் பெயர் குறிப்பிடப்பட்ட நபருக்கு அல்லது அவர்களது சட்டரீதியான முகவர்களுக்கு மட்டுமே நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்படல் வேணடுமென்பதுடன்,விளையாட்டுச் சங்கங்களுக்காக கொடுப்பனவு செய்யப்படும்போது உரிய செலவு விடயத்தின் கீழ் செய்யப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வீரர்களுக்கு வழங்கப்பட்டமைக்கான சான்றுப்படுத்தல் (கணக்காய்வு திகதி வரையில்) திணைக்களத்தினால் வழங்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | நிதிப்பிரமாணம் 880 மற்றும் 891 | அரச உத்தியோகத்தர்களின் பிணை அதிகாரச் சட்டத்திற்கு இணங்க மற்றும் நிதிப் பிரமாணம் 880 மற்றும் 881 இன் பிரகாரம் பிணை வைக்கப்பட வேண்டிய 15 அதிகாரிகளில் 06 பேருக்கு மட்டுமே பிணை வைப்பு செய்யப்பட்டிருந்தது. | 07 அதிகரிகளின் பிணை முறி மாதிரிப்படிவம் பூரணப்படுத்துவதற்கு கடிதம் மூலம் காட்டப்பட்டிருந்ததுடன் மேலும் இரண்டு அதிகாரிகளின் பிணை முறி மாதிரிப்படிவம் பூரணப்படுத்தப்பட்டு அனுப்பபட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2018 சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை 01 ஆம் பந்தி | மொத்தப் பதவிகளுக்குமான வருடாந்த செயலாற்றல் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட வேண்டியுள்ள போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கவில்லை. | இற்றை வரையில் வருடாந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவில்லை என்பதுடன் எதிர்காலத்தில் இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கான ஏற்பாடுகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 2016 இன் 01 ஆம் இலக்க தேசிய விளையாட்டு சங்கக் கட்டளை 7 (xii) பந்தி | தேசிய விளையாட்டுச் சங்கங்களினால் எதிர்வரும் வருடத்திற்கான வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அதன் செயல் நடவடிக்கைத் திட்டம் நடப்பாண்டின் முடிவின் போது மூன்று மாதங்களுக்கு முன்னர் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியள்ள போதிலும் 2021 ஆம் வருடத்திற்கான தேசிய விளையாட்டு சங்கங்களின் செயல் நடவடிக்கைத் திட்டம் 65 விளையாட்டுச் சங்கங்களில் 19 விளையாட்டுச் சங்கங்களால் மட்டுமே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தினால் பல தடவைகள் தேசிய விளையாட்டு சங்கங்கள் / சம்மேளனங்களுக்கு எழுத்து மூலம், தொலைபேசி மற்றும் மின்னஞ்கல் மூலம் 2021 ஆம் வருடத்திற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தை திணைக்களத்திற்கு அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டு வருடாந்த திட்டம் வரவழைக்கப்பட்டுள்ளன. | விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தினால் அனைத்து விளையாட்டு சங்கங்களும் கண்காணிக்கப்படுதல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்திட்டங்கள் முடிவடையாது கைவிடப்பட்டமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2021 ஆம் வருடத்தின் உத்தேச மற்றும் முன்னைய வருடங்களிலிருந்து முன்கொண்டு வரப்பட்ட 13 செயற்திட்டங்களின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 1155 மில்லியன் என்பதுடன் 2021 திசெம்பர் 31 இல் செலவுகள் ரூபா 324 மில்லியன் ஆகும். செயற்திட்டங்கள் பல்வேறு காரணங்களால் முடிக்கப்படாது கைவிடப்பட்டிருந்தமையால் இது வரை செலவிடப்பட்டிருந்த ரூபா 324 மில்லியன் தொகை விளைவற்ற செலவொன்றாக காணப்பட்டது. | 2021 ஆம் வருடத்தின் 13 செயற் திட்டங்களில் நிர்மாணம் ஆரம்பிக்கப்படாத செயற்திட்டங்கள் 04 உம், ஒதுக்கங்கள் இல்லாமையால் நிர்மாணம் நிறுத்தப்பட்டிருந்த செயற்திட்டங்கள் 03 உம் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் நிர்மாணம் கைவிடப்பட்டிருந்த செயற் திட்டங்கள் 06 உம் காணப்பட்டன. | ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்கள் திட்டமிட்டவாறு முடிவுத் திகதியில் நிர்மாணங்கள் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்படல் வேண்டும். |

### 3.2 செயற்திட்டங்களை நிர்மாணிப்பதில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2021 ஆம் வருடத்தில் உத்தேச மற்றும் முன்னைய வருடங்களிலிருந்து முன்கொண்டு வரப்பட்ட 33 செயற்திட்டங்களின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 1834 மில்லியன் என்பதுடன் 2021 திசெம்பர் 31 இல் செலவிடப்பட்ட செலவுகள் ரூபா 1796.83 மில்லியன் ஆகும். பல்வேறு காரணங்களினால் இச் செயற்திட்டங்களை முடிப்பதில் தாமதமேற்பட்டிருந்தது. 10 செயற்திட்டங்களுக்கான பணிகள் மட்டும் முடிக்கப்பட்டிருந்ததுடன் மேலும் 07 செயற்திட்டங்களுக்கான பணிகள் முடிவடைந்து ஒப்படைக்கப்பட்டிருந்தன. நிலவுகின்ற பொருளாதார நெருக்கடி நிலைமையில் ஒதுக்கங்களை மேற்கொள்வதில் சிரமங்கள் காணப்பட்டமையால் இந்த செயற்திட்டங்களுக்காக இதுவரை செலவிடப்பட்ட செலவிற்காக எதிர்பார்க்கப்பட்ட பலன்களைப் பெற்றுக் கொள்ள முடியாதிருந்தது. | 2021 ஆம் வருடத்தின் உத்தேச மற்றும் முன்னைய வருடங்களிலிருந்து முன்கொண்டு வரப்பட்ட 24 செயற்திட்டங்களில் 10 செயற்திட்டங்களுக்கான நிர்மாணங்கள் முடிவடைந்து கையளிக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன், மேலும் 07 செயற்திட்டங்கள் நிர்மாணிக்கப்பட்டு குறிப்பிட்ட தரப்பினருக்கு மற்றும் விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன. அத்துடன் மேலும் 16 செயற்திட்டங்களின் நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | எந்தவொரு செயற்திட்டமொன்றையும் குறிப்பிட்ட காலத்திற்குள் முடிப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்.**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| காணி மற்றும் கட்டிடங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் கணக்கில் எடுத்தல்.<br><br>விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்திற்கு சொந்தமான கீழே குறிப்பிடப்பட்டுள்ள காணி மற்றும் கட்டிடங்கள் 2021 திசெம்பர் 31 வரையில் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கில் எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>I. 33 ஆம் இலக்க டொரின்ரன் மாவத்தை - கொழும்பு 07<br>II. ஹொக்கி விளையாட்டு மைதானம் 100/10 சுதந்திர சதுக்கம் - கொழும்பு 07<br>III. ஹொக்கி விளையாட்டு மைதானம் அருகிலுள்ள விடுதி 100/08 சுதந்திர சதுக்கம் - கொழும்பு 07<br>IV. மாத்தறை கொட்வில மைதானம், மாத்தறை<br>V. பொலன்னறுவை தேசிய விளையாட்டுத் தொகுதி. | பதிவு செய்யப்படாத சொத்து ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 9 இடங்களில் 94/119 ஆம் இலக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குயின் எலிசெபத் விளையாட்டு மைதானம், நுவரெலியா இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சிற்கு கையகப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதுடன் விளையாட்டு விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்திற்கு சொந்தமான டொரிங்டன் மற்றும் ரீட் அவெனியூவில் அமைந்துள்ள தங்கும் விடுதிகளின் சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கிடப்பட்டுள்ளன. மிகுதிச் சொத்துக்களின் மதிப்பீடு செய்தல் தொடர்பான தற்போதைய தகவல்கள் காட்டப்பட்டிருந்தன. | அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் சொத்துக்கள் கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**4. மனிதவள முகாமைத்துவம்.**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 இல் விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் சிரேஷ்ட நிலையில் 03 வெற்றிடங்களும் மூன்றாம் நிலையில் 12 வெற்றிடங்களும் இரண்டாம் நிலையில் 59 வெற்றிடங்களும் ஆரம்ப மட்டத்தில் 18 வெற்றிடங்களும் காணப்பட்டதுடன் அவற்றில் உள்ளடங்கியுள்ள திணைக்களத்தின் மற்றும் விளையாட்டுத் துறைகளின் செயலாற்றலை பெரிதும் பாதிக்கின்ற சிரேஷ்ட நிலையில் 3 வெற்றிடங்கள் மற்றும் விளையாட்டு நடவடிக்கைகள் தொடர்பான பதவியணியில் 07 பதவிகளுக்கான 52 வெற்றிடங்கள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | வெற்றிடங்களாக உள்ள பதவிகளை ஆட்சேர்பபதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. | தற்போதுள்ள பொது நிர்வாக சுற்றறிக்கையின் படி திணைக்களத்தின் செயலாற்றலை நேரடியாக பாதிக்கும் வெற்றிடங்களை நிரப்புதல் வேண்டும். |